2018 பெப்ரவரி 22

**ஊடக அறிவித்தல்**

நெற் புள்ளிவிபரம் - 2017 சிறு போகம்

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு

தொலைபேசி இல: 011-2147464 தொலைநகல் இல: 011-2147463

---

கடந்த வருடத்தில் (2017) சிறு போகத்திற்கான நெற்செய்கை தொடர்பான புள்ளிவிபரத்தை வெளியிடுகையில், தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அமர சதரசிங்க அவர்கள், 2017 சிறு போகத்திற்கு ஏற்புடையதாக இலங்கையின் மொத்த நெல் உற்பத்தி 909,321 மெற்றிக் தொன்களாக மதிப்பிடப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். அதிகூடிய நெல் உற்பத்தியாக 186,647 மெற்றிக் தொன் அம்பாறை மாவட்டத்தில் பதிவாகியுள்ளதுடன் அது மொத்த நெல் உற்பத்தியில் 21% ஆகும். பொலன்னறுவை மாவட்டத்தில் 173,595 மெற்றிக் தொன் (19%) மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 97,050 மெற்றிக் தொன் (11%) நெல் உற்பத்தி பதிவாகியுள்ளது.

2016 சிறு போக நெல் உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 2017 சிறு போகத்தின் மொத்த நெல் உற்பத்தி 608,071 மெற்றிக் தொன்களினால் அதாவது 40% ஆல் வீழ்ச்சியடைந்துள்ளது. 2017 சிறு போகத்தில் ஏற்பட்ட வரட்சியான காலநிலை காரணமாக நெற் செய்கை மேற்கொள்ளுவதற்கு போதியளவு நீர் வசதிகள் கிடைக்காமை, அதன் காரணமாக நெற் செய்கை பண்ணப்பட்ட நிலப்பரப்பளவு குறைவடைந்தமை, எதிர்பார்க்கப்பட்ட சராசரி நெல் விளைச்சலை விட குறைந்த சராசரி நெல் விளைச்சல் கிடைத்தமை, அத்துடன் சில மாவட்டங்களில் பயிரழிவு ஏற்பட்டமையும் இவ்வாறு நெல் உற்பத்தி வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்களாக அமையலாம்.

2017 சிறு போகத்திற்கு ஏற்புடையதாக இலங்கையில் நெற் செய்கை பண்ணப்பட்ட மொத்த வயல் நில விஸ்தீரணம் 249,123 ஹெக்ரேயர் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 176,965 ஹெக்ரேயர் (71%) பெரும் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழும், 42,537 ஹெக்ரேயர் (17%) சிறு நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழும், 29,621 ஹெக்ரேயர் (12%) மானாவாரியிலும் பதிவாகியிருந்தது. இப் போகத்திற்கு ஏற்புடையதாக அம்பாறை மாவட்டத்திலேயே அதிகளவான நிலப்பரப்பில் நெற் செய்கை பண்ணப்பட்டிருந்ததுடன் இது 46,302 ஹெக்ரேயர் ஆக இருந்தது. இது இலங்கையில் நெற் செய்கை பண்ணப்பட்ட மொத்த வயல் நில விஸ்தீரணத்தில் 19% ஆகும். பொலன்னறுவை மாவட்டத்தில் 40,882 ஹெக்ரேயர், மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 24,211 ஹெக்ரேயர் நெற் செய்கை பண்ணப்பட்டிருந்ததாக பதிவாகியிருப்பதுடன் இது இப் போகத்தில் இலங்கையில் நெற் செய்கை பண்ணப்பட்ட மொத்த வயல் நில விஸ்தீரணத்தில் முறையே 16% மற்றும் 10% ஆகும்.

2017 சிறு போகத்திற்கு ஏற்புடையதாக நாட்டில் அறுவடை செய்யப்பட்ட மொத்த நில விஸ்தீரணம் 236,479 ஹெக்ரயர் ஆகும். இது விதைக்கப்பட்ட மொத்த நில விஸ்தீரணத்தில் 95% சதவீதமாகும். விதைக்கப்பட்ட மொத்த நில விஸ்தீரணமும் அறுவடை செய்யப்பட்ட மாவட்டங்களாக நுவரெலியா மாவட்டம், உடவளவை வலயம் மற்றும் மன்னார் மாவட்டம் ஆகியன அடையாளங் காணப்பட்டுள்ளன. இம் மாவட்டங்களில் அறுவடை செய்யப்படாத நில விஸ்தீரணம் பதிவாகி இருக்கவில்லை. விதைக்கப்பட்ட மொத்த நில விஸ்தீரணத்தில் மிகவும் குறைந்தளவு நில விஸ்தீரணம் அறுவடை செய்யப்பட்ட மாவட்டமாக புத்தளம் மாவட்டம் பதிவாகியுள்ளதுடன் அதன் பெறுமதி 40% ஆகும்.

நிலவிய வரட்சியான காலநிலை காரணமாக நெற் செய்கைக்குப் போதுமான நீர் வசதிகள் கிடைக்காமையினால் ஒப்பீட்டளவில் உயர்வான பயிரழிவு பதிவாகியுள்ளமை இதற்கான காரணமாக அமையலாம். மேலும், 2017 ஆம் ஆண்டில் சிறு போகத்தில் பதிவாகியிருந்த சராசரி நெல் விளைச்சல் ஒரு ஹெக்ரேயர்க்கு 4,291 கிலோ கிராம் ஆகும். ஒரு ஹெக்ரேயர்க்கான அதி கூடிய சராசரி விளைச்சலாக 5,770 கிலோ கிராம் உடவளவை விவசாய வலயத்தில் பதிவாகியிருந்தது.

நெல் புள்ளிவிபரம் தொடர்பிலான மேலதிகத் தகவல்களை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான (www.statistics.gov.lk) மூலம் வெளியிடப்பட்டுள்ளன.

கலாநிதி ஏ.ஜே. சதரசிங்க

பணிப்பாளர் நாயகம்

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

தொலைபேசி : 0112147020